AstroVed

# சத்வித்யா

மாலை: 1 மலர்: 8

எஸ்பி -75, சிட்கோ தொழில்துறை எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600058.



மாதம் இரு முறை வெளிவரும்
டிசம்பர் 16 முதல் 31வரை

ஆன்மீக விஞ்ஞான இதழ்

## பகவதி அம்மன் ஆலயச் சிறப்பு

★ திருமணத்தில் எண்கணிதம் ★ அரிய ஆன்மிக தகவல்

★ சித்தர் பூ மி ★ வீட்டிற்கு வாஸ்து சாஸ்திரம்

அனைத்து இதழ்களையும் AstroVed.com இணையதளத்தில்
இலவசமாக டவுன்லோடு செய்து பயன் பெறலாம்
மேலும் விபரங்களுக்கு போன்: 95660 00134, www.astroved.com

AstroVed

# சத்வித்யா



நம் இந்தியத்திருநாட்டில் "இல்லாதவர்கள் எனப்படுகின்ற ஏழைகள் அதிகம் உள்ளனர். இந்த நிலையை மாற்றவே ஒரு மந்திரத்தை விஸ்வாமித்திரர் அருளியிருக்கிறார். மன்னனாய் இருந்து ரிஷியாய் மாறிய விஸ்வாமித்திரர் மக்களின் வறுமையைப் போக்கும் ஓர் எளிய மந்திரத்தை எமக்கு அருளினார். அதுவே ஸ்ரீம் பிரிஸி Shreem Brzee என்னும் மந்திரம். இந்த மந்திரத்தை தொடர்ந்து உச்சரிப்பதன் மூலம் தரித்திரம் நீங்கி, செல்வ வளம் பெருகும்.

~ Dr. Baskaran Pillai




இது சத்வித்யாவின் டிசம்பர் மாத இரண்டாம் இதழ்! அதாவது இந்த 2020ம் ஆண்டின் இறுதி இதழ்! 2020ம் ஆண்டு பிறந்ததிலிருந்து விளக்கில் அடைபட்ட பூதங்கள் போல அனைவருமே அடைபட்டுக் கிடந்தாகி விட்டது இனி, புதிதாய்ப் பிறக்கும் புத்தாண்டு 2021, எல்லோருக்கும் புது வாழ்வை, நிம்மதியான வாழ்வை அருளட்டும்.

இப்போது பிறக்கும் மார்கழியில் இறைநாமத்தை தினந்தோறும் சொல்லி ஏற்றங்கள் பெறுவோம். நரக நோயால் உழன்ற அனைவருக்கும் சொர்க்கவாசல் திறக்கட்டும், சுகங்கள் பிறக்கட்டும்.

இனிவரும் காலங்களில் இன்பங்கள் தொடரட்டும் என்று


சத்வித்யா
வாழ்த்துகின்றது

(அச்சிட்டு வெளியிடுவோர்) ஆஸ்ட்ரோவேட்.காம்

# சித்தர் பூமி
# கடப்பா சித்தர்

நம்ம சித்தர்பூமி பகுதியில இப்ப நாம பார்க்கப்போற சித்தர், தமிழ்நாடு, ஆந்திரா, கர்நாடகா என்று மூன்று மாநிலத்தோட தொடர்புள்ளவர்.

இன்னும் சுருக்கமா சொல்லணும்னா காஞ்சிபுரம் to கடப்பான்னு ஒரே வரியில சொல்லலாம் இவர் பிறந்தது காஞ்சிபுரத்துல ஜீவசமாதி அடைந்தது கர்நாடக பூமியில! இடையில பல மகத்துவங்கள் செய்தது ஆந்திர மாநிலம் கடப்பாவுல! ஆனாலும் இவர் அறியப்படறது கடப்பா சித்தர் என்னும் பெயரால.



## குதிரைகள் பூட்டிய சாரட் வண்டி

16.02.1865ல் காஞ்சிபுரத்தில் மாபெரும் வணிக மரபில் செல்வந்தரின் மகனாகப் பிறந்தவர் தான் நமது கடப்பா சித்தர் அவர்கள்! தன் வீட்டிலிருந்து கடைக்கு செல்ல, இரட்டைக் குதிரைகள் பூட்டிய சாரட் வண்டியை தான் பயன்படுத்துவாராம். அந்த அளவுக்கு செல்வவளம் மிக்கது இவரோட குடும்பம்.

புனித நகரமான காஞ்சிபுரத்தில் பிறந்ததாலோ அல்லது விதிப்பயனாலோ இவருக்கு மிகமிக இளவயதிலேயே காஞ்சி ஏகாம்பர நாதரின் மேல் அளவற்ற பக்தியும் ஈர்ப்பும் ஏற்பட்டு விட்டது.

## மானஸ பூஜை

ஒருநாள், சிறுவனாக இருந்த நம்ம சித்தர் ஏகாம்பரேஸ்வரர் கோயிலுக்குப் போகிறார்! அங்கே, கூட்டம் காத்துக் கொண்டிருக்கிறது. அபிஷேகம் முடிந்து திரை போடப்பட்டு அலங்காரம் நடந்து கொண்டிருக்கிறது. இவருக்கோ அவசரமாய் கடைக்கு செல்ல வேண்டிய சூழல். அரைகுறை மனதோடு..அதாவது, இறைவனை தரிசிக்க முடியவில்லையே என்னும் குறையோடு கோவிலிலிருந்து செல்கிறார்.

அன்று முழுவதும் எந்த வேலையிலும் மனம் நாட்டம் கொள்ளவில்லை, இறை சிந்தனை ஒன்றே மனமெங்கும் வியாபித்திருந்தது. இவர் தினமும் பார்த்த அபிஷேகம், அலங்காரம் தான் ஆனால், இன்று பார்க்க முடியாமல் போனதே என்னும் ஆதங்கம் இவரை ஆட்டிப்படைத்தது.

அன்று இரவு படுக்கைக்கு சென்றார். உறக்கம் வர மறுத்தது. இதுவரை தினமும் இவர் கண்ணாரக் கண்டு மகிழ்ந்த காட்சி, மனத்திரையில் ஓடியது. அந்த தெய்வீகக் காட்சியைக் கண்டு மனம்

பரவசமடைந்தது. இணையில்லா தரிசனம்! இடைஞ்சலே இல்லாமல் தரிசித்து பூஜை செய்தால் என்ன? இப்படி நினைத்த மாத்திரத்திலேயே மனம் ஆனந்தக் கூத்தாடியது.

இப்படியே தினம் தினம் மானச பூஜை என்னும் மானசீக பூஜையை சுவாமிகள் தனது 12வது வயதிலிருந்து 24வயதுவரை செய்து வந்திருக்கிறார். ஸ்வாமிகளுடைய 25வது வயதில் இவரது பெற்றோர், இவருக்குத் திருமணம் செய்து வைத்துள்ளனர். ஆனால், மண வாழ்வில் நாட்டம் இல்லாமல் இறைவன்பால் மட்டுமே ஈடுபாடு கொண்டிருக்கிறார்.

## மந்திரோபதேசம்

சுவாமிகளை முற்றிலும் இறை பணிக்கு திருப்ப எண்ணிய இறைவன் ஏகாம்பரநாதர், ஒரு நாள் இவரது சாரட் வண்டியை இடைமறித்து அதில் ஏறி, இவரது எதிரே அமர..மெய்மறந்து அவரையே பார்த்தபடி,



செய்வதறியாது செயலற்று இருந்திருக்கிறார், சுவாமிகள். இறைவன், ஒரு ஓலையில் மந்திரத்தை எழுதி சுவாமிகளின் கையில் கொடுத்து, அவரது காதில் மந்திரத்தை உபதேசம் செய்திருக்கிறார். அதோடு சாரட் வண்டியை விட்டிறங்கி திடீரென்று மறைந்து விட, சுவாமிகள், அவர் ஏகாம்பரேஸ்வரர் தான் என்பதைப் புரிந்துகொண்டு, தன் எண்ணம் முழுமையும் இறைவனுக்கே என்று பரிபூரணமாக உணர்ந்திருக்கிறார். அப்போதே காஞ்சியையும் தன் குடும்பத்தையும் துறந்து, கடப்பா நகருக்கு சென்று ஆசிரமம் அமைத்திருக்கிறார்.

அப்போதிருந்து இறையருளாலும் தன் தவவலிமையால் பல அற்புதங்களையும் சித்து வேலைகளையும் செய்து எளிய மக்களின் வாழ்வில் இன்பங்களை மலரச் செய்துள்ளார்.

ஜலஸ்தம்பம் என்னும் நீர்மேல் அமர்வது, நடப்பது, படுப்பது போன்ற அற்புத சக்திகள் கைவரப் பெற்றிருக்கிறார். வெளி நாடுகளான மொரிஷியஸ், தென் ஆப்பிரிக்கா போன்றவற்றில் ஜல ஸ்தம்பம் என்னும் சித்து வேலையைக்காட்டி, பல அற்புதங்கள் செய்ய, அந்நாட்டவர் ஏசுவின் சிலை மற்றும் புத்தர் சிலையை பரிசாகக் கொடுத்துள்ளனர். அந்த சிலைகள் இன்றும் இந்த ஜீவசமாதி ஆலயத்தில் வீற்றிருப்பதைக் காணலாம்.

சிலகாலம் கடப்பா ஆசிரமத்தில் அற்புதங்கள் நிகழ்த்திய கடப்பா சித்தர், 1937ம் ஆண்டு பெங்களுருக்கு அருகில் உள்ள கெம்பபுரா அக்ரஹாரம் என்னும் இந்த இடத்தில் ஆசிரமம் அமைத்து, தன் இறைபணியைத் தொடர்ந்துள்ளார்.

இந்த ஆசிரமத்தில், மக்களின் துயர் தீர்க்கவும் உலக நன்மைக்காகவும் ஒரு முறை ஓர் ஆண்டு முழுவதும் தவத்தில் இருந்துள்ளார். அதன்பின் 200 நாட்கள் தவமிருந்துள்ளார், தான் தவமிருக்கும் காலங்களில் சுவாமிகள் உணவோ, நீரோ அருந்த மாட்டாராம் என்றாவது பால் வேண்டுமென்றால் ஒரு

சீட்டில் எழுதி, மாடத்தில் வைப்பாராம். இத்தனைக்கும் இவர் தவம் தவம் இருந்தது இரண்டுக்கு இரண்டு என்ற அளவுள்ள மிகவும் சிறிய பாதாள அறை. இன்றும் இந்த அறையில் பக்தர்கள் அமர்ந்து தியானம் செய்கின்றனர்.

## சிலையும் சிம்மாசனமும்

கடப்பா சித்தரின் அரும் பெரும் சக்தியை அறிந்த மைசூர் மகாராஜா, சுவாமிகள் உயிருடன் இருந்த போதே ஓர் அழகிய சிம்மாசனத்தையும் கடப்பா சித்தரின் தத்ரூபமான சிலையையும் காணிக்கையாய் அனுப்பியுள்ளார்

அந்த சிம்மாசனத்தில் அமர்ந்து, சித்தர் பக்தர்களுக்கு தரிசனம் கொடுத்துள்ளார். சுவாமிகளது சிலையை அவரே பிரதிஷ்டை செய்து, அன்று தனது சக்தி முழுவதையும் அந்த சிலைக்கு அளித்து அர்ப்பணம் செய்துள்ளார். அதனால் தான் இன்றளவும் சுவாமிகளின் சிலை உயிரோட்டமாகவும் வேண்டிநிற்கும் பக்தர்களின் குறைகளை நிவர்த்தி செய்வதாகவும் உள்ளது.

கடப்பா சித்தர் என்பதற்கு கருப்பைக்குள் புகாமல் கடந்தவர், அதாவது பிறவா வரத்தைப் பெற்றவா என்று இவரது சீடர்கள் கூறுகின்றனர்.

திருமேனி தாங்கியிருக்கும் போதே தன் சக்தி அனைத்தையும் திரட்டி தன் சிலைக்கு பிரயோகம் செய்ததால் இந்த ஜீவசமாதிக்கு வந்து வேண்டுவோரின் வாழ்வில் இன்பம் மலர்கின்றது. கடப்பா சித்தரின் அருளால் துன்பங்கள் தொலைந்து. நன்மைகள் நம்மை நாடி வரும்.

~ ரா. பன்னீர்செல்வம்



உங்கள் இல்லத்தில் வைதீக/ஆகம முறைப்படி யாகங்கள் மற்றும்
சத்ய நாராயண பூஜை போன்ற அனைத்து பூஜைகளும் செய்து தர அணுகவும்
www.priestservices.com போன்: 95660 00134

# திருக்கோயில் திருவுலா

# அருள்மிகு பகவதி அம்மன் ஆலயச் சிறப்பு

கன்னியாகுமரி.. முக்கடல் சங்கமிக்கும் புனித பகுதியில் நித்தம் தவம் செய்யும் அருள்மிகு கன்னியாகுமரி அம்மன் அருள்மிகு பகவதியம்பிகையாக அருள் காட்சி தந்து அருள் பாலிக்கின்றாள்.

தமிழகத்தின் தென் கோடியில் கன்னியாகுமரி என்னும் நெய்தல் நிலப் பகுதியான முக்கடல் சங்கமிக்கும் எழில்மிகு பசுமை படர்ந்த பூமியில் எழுந்தருள்பவளே அருள் மிகு கன்னியாகுமரி அம்மன் என்று பக்தியுடன் அழைக்கப் பெறும் அருள்மிகு பகவதி அம்மன்.

முக்கடல் தாலாட்டும் இடத்தில் நித்தம் தவம் செய்யும் ஸ்ரீ பகவதி அம்மன் இராஜ கம்பீரத்தோடு சிறுமி வடிவில் அருள் மழை பொழிபவளாக, கருணைக் கடலாக எழுந்தருளும் இத்தாய் உறையும் இக்கோயில் மிகப் பிரமாண்டமாக உள்ளது. மிகப்பெரிய மதிற்சுவர்களுடன் நெடிய சுற்றுப் பிரகாரங்களுடன் திருக்காட்சி தருகின்றது. கடலலை அம்மனுக்கு அருட்கவியெழுத அடியவர்கள் மனம் மொழி மெய் ஒன்றுபட மனதார வழிபடும் காட்சியோ அழகோ அழகு! மிகுந்த மகிழ்வையும் மன நிறைவையும் தரும் அருள் ஆலயம்.

கன்னியாகுமரிக்கு செல்லும் வழி கன்னியாகுமரி மாவட்ட தலைநகராக உள்ள நாகர்கோவிலில் இருந்து பேருந்து மூலமாகவோ தொடர்வண்டி மூலமாகவோ செல்லலாம் வாகன வசதியும் உண்டு. நாகர்கோயில் சுசீந்திரம் அடுத்த இயற்கை அழகும் செயற்கை அழகும் மிளிரும் கன்னியாகுமரியில் எந்தப்பக்கம் திரும்பினாலும் அழகு கொட்டிக்கிடக்கின்றது பசுமை தவழ் பூமியாக மிளிர்கின்றது

கடற்கரையோர மிகப்பெரிய பாறைகளில் மோதும் பேரலைகள் ரம்மியமாக காட்சி தருகின்றன வான்மறை தந்த திருவள்ளுவர் சிலை, சுவாமிவிவேகானந்தர் நினைவாலயம் மகாத்மா காந்தியடிகள், பெருந்தலைவர் காமராசர் மணிமண்டபம் எனப் பார்க்க, பிரமிக்க பல நல்ல விஷயங்கள் உள்ளன.

இத்திருத்தலத்தில் பல அற்புதங்களும் அதிசயங்களும் உள்ளன, கிழக்கு நோக்கிய கருவறை அழகு! கிழக்கு கோபுர வாசல் எப்போதும் மூடியே உள்ளது.

பன்னெடுங்காலத்திற்கு முன்பே இத்தல நாயகியின் மூக்குத்தி ஒளிபட்டு கப்பல் ஒன்று தரை தட்டியதாக இப்பகுதி மக்கள் கூறுகின்றனர்.

எல்லாம் வல்ல ஈஸ்வரனை நாளும் நெஞ்சுருக வழிபட்டு அன்னை பராசக்தி கடுந்தவம் இருக்கின்ற அற்புத அருள் கோலத்தை கண்ணார காணலாம். சின்னஞ்சிறுமியாக எழிலுடன் தோற்றமளிக்கும்

கயிலை நாதரின் மனம் கவர்ந்த மகா சக்தியாம் உலகம்மை தன் இதயக்கமலத்தையே இனியக் கோயிலாக்கி ஈஸ்வரனை நாளும் வழிபட்டு உள்ளம் உருக தரிசிக்கின்றாள். இத்தகைய பொலிவுமிகு அருள் தரும் இத்தல அம்பிகையாம் ஸ்ரீ பகவதி அம்பிகையை மனதார வழிபட்டு பதினாறு பேறும் பெற்று பெருவாழ்வு வாழ்வோம்.

எழுதியவர்
சைவ சித்தாந்த செம்மல்
கவிஞர் சீனு செந்தாமரை
கடலூர்

# புதன் எந்திரமும் மந்திரமும்



ஞாபக சக்தி, சிந்தனை திறன் ஆகியவற்றிற்கு காரகன் புதன் பகவான் ஆவார். ஜனன ஜாதகத்தில் எந்த ஒரு ராசி அல்லது வீட்டிலும் புதன் கிரகத்தோடு மற்ற எந்த ஒரு கிரகத்தையும் விட ராகு கிரகம் சேர்ந்திருக்காமல் இருப்பது மிகவும் நல்லது. இத்தகைய கிரக அமைப்பை கொண்டவர்களுக்கும் சிறந்த ஞாபகத்திறன் மற்றும் சிந்தனை சக்தி இருக்கும் என்றாலும் அவற்றை தீய வழியில் செலுத்தும் குணமே இந்த ஜாதகர்களிடம் மேலோங்கியிருக்கும். சூரியனிடமிருந்து அதிகமாக ஒளியை பெறும் கிரகம் புதன். இது அலி கிரகம். பச்சை நிறம் கொண்டவர். மகா விஷ்ணுவின் அம்சம். கிரகங்களில் புதன் உடற்கூறு இயக்கத்தில் மிக முக்கிய பங்கு வகிக்கிறது.

நவகிரகங்களில் நரம்புகளில் ஆதிக்கம் செலுத்தும் புத பகவானை வழிபடுவதன் மூலம் நரம்பு சம்மந்தமான கோளாறுகள் நீங்கும். அதோடு கல்வியிலும் அறிவிலும் சிறந்து விளங்கும் ஆற்றலும் கிடைக்கும். புதன் பகவான் மூளை, நரம்பு, தண்டுவடம் ஆகியவற்றிற்கு ஆதிபத்யம் வகிக்கிறார். புதன் பலவீனமாக இருக்கும் பட்சத்தில் உடல்ரீதியாகவும், மனரீதியாகவும் சில கோளாறுகள் ஏற்படும். புதன் இருக்கும் இடத்தை வைத்து அவருடைய புத்தியை அறிந்துகொள்ள முடியும். அதாவது அஜ புத்தி, கஜ புத்தி, கோ புத்தி என்று பிரித்துக் கூற இயலும்.

"ஓம் கஜத்வஜாய வித்மஹே
சுக ஹஸ்தாய தீமஹி
தந்நோ புத ப்ரசோதயாத்"

வீட்டில் புதனுடைய இயந்திரத்தை வைத்து அதன் முன்பு அவருடைய காயத்ரியை சொல்வதன் மூலமாக மேற்கூறிய வியாதிகளும் நீங்கி அதேபோல் ஞாபக சக்தி அதிகரித்து குழந்தைகளுடைய கல்வியும் மேன்மை பெறும்.



ஜாதகத்தில் புதன் என்பவர் வடக்கு திசையை ஆள்பவர், இவர் 3 , 6 வீட்டிற்கு அதிபதி. 3, 6 என்று சொல்வது உபஜெய எனப்படும். உபஜெய ஸ்தானங்கள வாழ்க்கையை வெற்றி பெறுவதற்கு உபயோக கரமாக இருக்கிறது.

இந்த புதனுடைய எந்திரம் வீட்டில் வடக்கு திசையில் ஜன்னல் கதவு இல்லாத பிரச்சனையை சரி செய்கிறது. புதனுடைய இயந்திரத்தையும் புத பகவானுடைய மந்திரத்தையும் சொல்வதன் மூலமாக குடும்பத்தில் உள்ளவர்களுடைய ஞாபக சக்தி, புத்தி கூர்மை, தனம், வேலை, முன்னேற்றம் இவை எல்லாவற்றையும் புதபகவான் அருள்கிறார். புத பகவானுடைய புராணக்கதைகளை ஸ்ரீமத் பாகவதத்தில் நீங்கள் பார்க்கலாம்

~ ஆஸ்ட்ரோவேட் ஜோதிடர் ஜெயம் ஜனார்தனன்

# மார்கழி மாதம்

பிள்ளையார் பிடிக்கக் குரங்காய் முடிந்தது ?

பிள்ளையார் பிடிக்கக் குரங்காய் முடிந்தது- நமக்கெல்லாம் நன்கு தெரிந்த பழமொழி தான் இது. மங்கல கரமான இப்பழமொழி உருவானது, மார்கழி மாதத்தை வைத்துத்தான் உருவானது.

பிள்ளையாரிடம் தொடங்கி ஆஞ்சநேயரைத் துதித்து முடிப்பதை, பஜனை சம்பிரதாயங்களில் பார்த்திருக்கலாம்.

அதாவது தொடங்கிய காரியம் நன்றாக-மங்கல கரமாக முடிந்தது என்பதையே "பிள்ளையார் பிடிக்கக் குரங்காய் முடிந்தது" எனக் கூறினார்கள்.

பிள்ளையாரிடம் தொடங்கி குரங்கில்(ஆஞ்சநேயரிடம்) முடியும் ஒரே மாதம், "மாதங்களில் நான் மார்கழியாக இருக்கிறேன்" என்று கண்ணன் கீதையில் சொன்ன "மார்கழியில்" மட்டுமே. ஆம்!

மாதத்தின் முன்பகுதியில் "பிள்ளையார் நோன்பு" என்று கொண்டாடத்தொடங்கி, மாதக்கடைசியில் "ஆஞ்சநேய ஜயந்தி" என்று, அனைத்துத் தெய்வ வழிபாடுகளும் நிகழ்வது "மார்கழி"யில் மட்டுமே.

பிள்ளையார் நோன்பு கொண்டாடும் விதம் மார்கழி மாதம் முழுதும் ஆண்-பெண் என அனைவரும் சூரியன் உதிப்பதற்கு இரண்டு மணி நேரம் முன்பாகவே எழுந்து நீராடி, அன்றைய காலை கர்மானுஷ்டானங்களை - வழிபாட்டை முடித்துக்கொள்வார்கள்.வீட்டைத் தூய்மைசெய்து முற்றத்தின் நடுப்பகுதியை சாணத்தால் மெழுகி, மாக்கோலமிட்டு, சாணத்தால் பிள்ளையார் பிடித்து வைத்து, அவரிடம் வேண்டுவார்கள். "விக்கினங்களை நீக்கும் விக்கினேஸ்வரா! எங்கள் வீடுகளில் அசுர - பூதப் பிசாசுகளின் தொல்லையால் எந்த விதமான துயரமும் நேராதபடி, எங்களைக் காப்பாற்றுவாயப்பா!" என வேண்டுவார்கள்.



அகால மரணம்-விபத்து முதலியவற்றால் துர்மரணம் அடைந்த உயிர்கள் பிசாசாக அலையும். அந்தப் பிசாசுகள் தங்களுக்குத் தொடர்பு உடையவர்களின் வீடுகளில் நுழைய முற்படும். அப்போது விநாயகரின் காவல் காரணமாகப் பிசாசுகள் வீட்டின் உள்ளே நுழைய முடியாது.

இவை அனைத்தும் நிகழ்வது,தேவர்களின் விடியற்காலை நேரமான "மார்கழி"யில்.

பிள்ளையாரின் காவல் காரணமாக உள்ளே நுழைய முடியாத பிசாசுகள் சும்மாயிருக்குமா? எறும்பாகவும் ஊர்வனவாகவும்மாறி, கோலமிட்ட பச்சரிசி மாவை உண்டுவிட்டு மனதார வாழ்த்திச்செல்லும். இதன் காரணமாகவே பச்சரிசிமாவால் கோலமிடச் சொன்னார்கள் முன்னோர்கள். இவ்வாறு மெழுகிக் கோலம் போடப்பட்ட வீட்டிற்கு,தேவர்கள் வந்து ஆசீர்வாதம் செய்வார்கள்.

தொடர்ந்து இவ்வாறு நாள்தோறும் செய்யப்படும் விநாயக வடிவங்களை, தைப்பொங்கலுக்குப் பின் நல்லதொரு நாளில், மொத்த விநாயக வடிவங்களையும் ஓரிடத்தில் வைத்துப் பூஜைசெய்து, கொழுக்கட்டை முதலான நைவேத்தியங்களைச் செய்வார்கள். பிறகு பிரத்தியேகமாகச் செய்யப்பட்ட சிறியதொரு தேரில், அனைத்து விநாயக வடிவங்களையும் வைத்து அலங்காரம் செய்து, வாத்திய கோஷத்துடன் சென்று, கடல்-நதி-குளம் முதலான ஏதாவதொரு நீர் நிலையில் அவற்றைச் சமர்ப்பணம் செய்து திரும்புவார்கள்.

மார்கழியில் இவ்வாறு பிள்ளையார் பிடித்து வைத்து, வழிபாடு செய்தால் வறுமை நீங்கும், வியாதி போகும், செல்வம் சேரும், விரும்பும் பேறுகள் கிடைக்கும், பித்ரு தோஷங்கள் நீங்கும் என்பது, முன்னோர்கள் கண்டறிந்த உண்மை.

~ சொல்லின் செல்வர் PN பரசுராமன்

## லக்கினம் (Ascendant) அல்லது ஜென்ம ராசி (Moon Sign) அல்லது சூரியன்(Sun Sign) நின்ற ராசிகளில் பிறந்தவர்களின் குணாதிசயங்கள்

| ராசி | குணங்கள் |
|---|---|
| மேஷம் | நேர்மறை: தைரியமானவர்கள், தன்னம்பிக்கை மிக்கவர்கள், நேர்மறை எண்ணம், நேர்மையானவர்கள். எதிர்மறை: முன்கோபம், யோசிக்காமல் பேசிவிடுவது. |
| ரிஷபம் | நேர்மறை: நம்பிக்கையானவர்கள், பொறுமையானவர்கள். எதிர்மறை: பிடிவாதம், சமரசம் செய்யமுடியாதவர்கள். |
| மிதுனம் | நேர்மறை: பாசமானவர்கள், ஆர்வமிக்கவர்கள். எதிர்மறை: பதட்டமானவர்கள், சந்தேக மனப்பான்மை. |
| கடகம் | நேர்மறை: கற்பனை வளம், விசுவாசமானவர்கள், வசப்படுத்தும் ஆற்றல் மிக்கவர்கள். எதிர்மறை: சூழ்ச்சி, சந்தேக புத்தி. |
| சிம்மம் | நேர்மறை: ஆக்க அறிவு, மகிழ்ச்சியானவர்கள், நகைச்சுவை உணர்வு, தாராள மனம். எதிர்மறை: திமிர், சோம்பேறி, பிடிவாதம். |
| கன்னி | நேர்மறை: விசுவாசமானவர்கள், கடுமையாக உழைப்பவர்கள். எதிர்மறை: கூச்ச சுபாவம், அதிகமாக கவலைப்படுபவர்கள். |
| துலாம் | நேர்மறை: கருணை, எளிதாக பழகக்கூடியவர்கள். எதிர்மறை: சுயபட்சாதாபமுடையவர்கள். |
| விருச்சிகம் | நேர்மறை: தைரியமானவர்கள், சமயோஜித புத்தி, திறமை. எதிர்மறை: ரகசியம், வன்முறையாளர்கள், பொறாமை குணம். |
| தனுசு | நேர்மறை: தாராள குணம், நகைச்சுவையாளர்கள், லட்சியவாதிகள். எதிர்மறை: பொறுமையில்லாதவர்கள், |
| மகரம் | நேர்மறை: ஒழுக்கம் நிறைந்தவர்கள், சுயகட்டுப்பாடு, பொறுப்புமிக்க, நல்ல பழக்கவழக்கம். எதிர்மறை: மன்னிக்கும் மனப்பான்மையற்றவர்கள். |
| கும்பம் | நேர்மறை: மனிதாபிமானமிக்கவர்கள், சுதந்திரமானவர்கள். எதிர்மறை: உணர்ச்சிகளை வெளிக்காட்டாதவர்கள். |
| மீனம் | நேர்மறை: இசை ஆர்வம், கலைகளில் ஆர்வம், இரக்க குணம். எதிர்மறை: அச்ச உணர்வு, அதிகமாக வருத்தப்படுபவர்கள். |

~ ஆஸ்ட்ரோவேட் ஜோதிடர் மு. செந்தில் நாதன்

# மூலிகை ரகசியம்



## நித்திய கல்யாணி (Sadabahar)

இன்றைய சூழ்நிலையில் நாட்டில் பலருக்கும் இருக்கின்ற அசாதாரண நோய்களுக்கு மருந்தாகின்ற அரும்பெரும் மூலிகை நித்திய கல்யாணி என்னும் மூலிகை இதற்கு சுடுகாட்டு மல்லிகை, காட்டு மல்லிகை எனவும் பெயர்கள் உண்டு.

சுடுகாடுகளில், ஆற்றுப் படுகைகளில் மற்றும் நீர்வளம் மிகுந்த இடங்களில் காணப்படும் இந்த தாவரம் இப்போது, இதனுடைய பூவின் அடிகால் வீட்டுத் தோட்டங்களை அலங்கரிக்கிறது.

### குணமாக்கும் நோய்கள் :

கொடிய நோயான புற்றுநோய், சர்க்கரை நோய் மட்டுமல்லாது, சளி, இருமல், காய்ச்சல், சிறுநீர்ப்பாதையில் ஏற்படும் தொற்று என பல நோய்களை விரட்டும் தன்மை கொண்டது.

### பயன்படுத்தும் முறை :

15பூக்கள், 4இலைகள் எடுத்து 2டம்ளர் தண்ணீரிலிட்டு 1/2டம்ளராக காய்ச்சி, 3 வேளை குடித்தால் புற்றுநோயின் அவதிகள் குறைந்து குணமாகும்.



இதன் தண்டு, வேர், இலை, பூ ஆகியவற்றை நிழலால் உலர்த்தி, பொடியாக்கி தேன் கலந்து 2 வேளை சாப்பிடலாம்.

இலைகளை காய்ச்சி, கசாயமாக பருக சர்க்கரை நோய் கட்டுப்படும்.

அழகிய வண்ண மலர்கள் பூத்துக் குலுங்கும் இந்த நித்திய கல்யாணி மூலிகை மனித குலத்திற்கு கிடைத்த வரமாகும்.

~ ரா. பன்னீர்செல்வம்

# பூ வைத்த பூவைக்கு...

முன்னோர்கள் காலத்தில், மார்கழி மாதம் பிறந்து விட்டால் போதும், அதிகாலையில் எழுந்து நீராடி, அவரவர்கைகளில் தாள-வாத்தியங்களுடன், பகவானின் திருநாமங்களைப் பாடி, வீதியில்



பஜனை செய்தவாறு வருவார்கள். அதற்கு முன்னதாகப் பெண்கள் தங்கள் வீட்டு வாசல்களில் சாணம் தெளித்துப் பெருக்கி,கோலம் போடுவார்கள். சில வீடுகளில் கோலத்தில் சிறிய சாண உருண்டை ஒன்றில் பறங்கி-பூசணிப் பூ வைப்பார்கள். எல்லா வீடுகளிலும் இவ்வாறு வைக்க மாட்டார்கள். எந்த வீட்டில் பெண்ணோ அல்லது பிள்ளையோ திருமணத்திற்குத் தயாராக இருக்கிறார்களோ, அந்தவீடுகளில் மட்டும் வாசல்கோலத்தில் அவ்வாறு பூக்கள் வைக்கப்படும். அப்படி வைக்கப்பட்ட பூக்கள் வீதிபஜனை செய்தவாறு வருபவர்களின் பார்வையில் படும், "இந்த வீட்டில் பெண்/பிள்ளை திருமணத்திற்குத் தயாராக இருக்கிறார்கள். நம் பெண்/பிள்ளைக்குப் பேசி முடிக்கலாம்" என்று தீர்மானித்து, தை மாதம் பிறந்ததும் பேசி முடித்துத் திருமணம் நடத்துவார்கள். இதை ஒட்டியே "தை பிறந்தால் வழி பிறக்கும்" எனும் பழமொழி உருவானது.

இத்தனைக்கும் மேலாக மார்கழி மாதம் அதிகாலையில் எழுந்திருந்து கோலம் போடுவது-வீதி பஜனை செய்வது முதலானவற்றின் மூலம், "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" எனும் தூய்மையான ஆரோக்கியம் கிடைக்கிறது.



மார்கழி மாதத்தில் மட்டுமே "ஓசோன்" மண்டலம் என்பதில் இருந்து அபூர்வமான சக்திகள் சில வெளிப்பட்டுப் பரவியிருக்கின்றன. ஆரோக்கியத்தை அளிக்கும் அச்சக்திகள் நீர் நிலைகள் முதலான இடங்களில் நன்கு பரவியிருக்கும். சூரியன் உதித்ததும் அச்சக்திகள் சூரிய வெப்பத்தால் ஆவியாக போய் விடும். அதற்கு முன் அச்சக்திகளைப் பெற வேண்டும் நாம்-என்ற நோக்கிலேயே, மார்கழி மாத அதிகாலை நீராடல், கோலம் போடுவது, வீதி பஜனை என்றெல்லாம் வைத்தார்கள் முன்னோர்கள்.

மனக்கவலை தீர்க்கும் மார்கழியின் மகத்துவத்தைச் சொன்ன பெரியவர்களின் வாக்குகளை இயன்றவரை, செயல்படுத்துவோம்! இன்னல்கள் விலகும்! சந்தேகமில்லை.

~ சொல்லின் செல்வர் PN பரசுராமன்

# பன்னிரு திருமுறையும் பரிவுமிகு தாயுமானவரும்

திருமுறை சைவப் பெருநெறியை போற்றும் தெய்வப்பனுவல்! தெள்ளு தமிழின் தேன் தமிழ் சொல்லருவி! கயிலைநாதன் செவிமடுத்த தனித்தமிழ் வேதம்! தில்லை கூத்தபிரான் திருக்கரங்கள் வருந்த எழுதிய ஞானநூல் என்று பெருமைக்குரியது. மூவர் தமிழ் மூவுலகமும் போற்ற நிலைத்து நிற்கிறது.

தோடுடைய செவியன் எனப் பாடிய திருஞான சம்பந்தர் அருளிச் செய்த முதலாம் திருமுறை பதிகம். "உண்ணாமுலை உமையாளொடும் உடன் ஆகிய ஒருவன்" என்று எம்பெருமானை சிறப்பித்து பேசுகின்றார். ஞான சம்பந்த பெருமான் திருநீற்று பதிகம் பாடியது பரமனின் திருவருளாகும்.



மந்திரம் ஆவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தரம் ஆவது நீறு துதிக்கப்படுவது நீறு
தந்திரம் ஆவது நீறு சமயத்தில் உள்ளது நீறு
செந்துவர் வாய் உமை பங்கன் திரு ஆலவாயன் திருநீறே.

என்று திருநீற்றின் சிறப்புகளை பத்து பாடல்களில் பட்டியலிட்டு உள்ளார். "வேய் உறு தோளிபங்கன் விடம் உண்ட கண்டன்" எனத் தொடங்கும் ஞான சம்பந்த பெருமான் அருளிச்செய்த கோளறு திருப்பதிகம் 11 பதிகங்களை மனம் மொழி மெய் ஒன்றுபட பாடி வழிபட்டால் உமா மகேஸ்வரனின் உன்னத அருள் நலத்தை உடன் பெறலாம்.

மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணின் நல்லகதிக்கு யாதும் ஓர் குறைவு இலைக்
கண்ணின் நல்ல ▪ து உறும் கழுமள வளநகர்ப்
பெண்ணின் நல்லாளொடும் பெருந்தகை இருந்ததே.

இப்பதிகத்தை படித்தால் எல்லாம்வல்ல ஈசனை காதலாகி கசிந்துருகி கண்ணீர் மல்க வைக்கிறது. நமச்சிவாயத் திருப்பதிகம் அழகோ அழகு!
"காதல் ஆகி கசிந்து கண்ணீர் மல்கி
ஓதுவார் தமை நன்னெறிக்கு உய்ப்பது
வேதம் நான்கினும் மெய்ப் பொருளாவது
நாதன் நாமம் நமச்சிவாயவே"
என்று உணர்ந்து உணர்த்துகிறார்!

தொடரும்.....

# வீட்டிற்கு வாஸ்து சாஸ்திரம்



1. அஷ்ட திக் பாலகர்கள் ஆளும் இடங்கள். பார்க்க படம்


2. வாஸ்துவின் விண் காந்த சக்தி / மின் காந்த சக்தி (நேர்மறை சக்தி) வட-கிழக்கு மூலையிலும்.

3. வாஸ்துவின் எதிர்மறை சக்தி தென்-மேற்கு மூலையிலும் உள்ளது.

4. வட-கிழக்கு மூலையில் அதிகம்திறந்த இடமாகவும் / தாழ்ந்தும் இருக்க வேண்டும்.

5. தென்-கிழக்கு மூலை மேடாகவும் / உயர்ந்தும் / கணமானப் பொருட்களை வைக்கும் இடமாகவும் இருக்க வேண்டும்.

6. வடக்கு திசையை ஆழ்பவர் குபேரன் ஆவார் எனவே வடக்கு திசையில் கஜானாவை யும் பண பெட்டியையும் வைத்தல் தன நிலையை உயர்த்தும்.




7. வடகிழக்கு திசை ஆள்பவர் ஈசானன் ஆவார் வடகிழக்கு மூலையில் நேர்மறை சக்திகள் நிறைந்துள்ளதால் பூஜை அறையை அமைத்தால் வீட்டிற்குள் அனைத்து தெய்வங்களின் அருளாசியை பெறமுடியும்.

8. கிழக்கு திசையை ஆட்சி செய்பவர் இந்திரன் ஆவார். கிழக்கு திசையில் நேர்மறை சக்தி நிறைந்துள்ளதால் பூஜை அறை, குழந்தைகள் அறை மற்றும் சாப்பாட்டு அறை அமைக்க உகந்த இடமாக கிழக்கு திசை விளங்குகிறது.

9. தென்கிழக்கு திசையை ஆள்பவர் அக்னி பகவான் ஆகும் எனவே தென் கிழக்கில் சமையல் அறையையும் சாப்பாட்டு அறையையும் அமைப்பது மிகுந்த நன்மையை ஏற்படுத்திக் கொடுக்கும்.

10. தெற்கு திசையை ஆள்பவர் எமன் ஆகும் எனவே தெற்கு திசையில் கழிவு அறையும் படுக்கை அறையும் அமைப்பது நன்மை பயக்கும்.

11. தென்மேற்கு திசையானது எதிர்மறை சக்தி உலாவும் இடமாக இருப்பதால் தென்மேற்கு திசை உயர்ந்து இருக்க வேண்டும் கணவன் மனைவி படுக்கும் படுக்கை அறை, கழிவறை மற்றும் கணமான பொருட்கள் வைக்கும் அறைகளை அமைப்பது நல்ல சயன சுகத்தை ஏற்படுத்தி கணவன் மனைவிக்குள் ஒற்றுமையை நிலவச்செய்யும்.

12. மேற்கில் பூஜை அறை (2ம் பட்சம்) இருக்கும் பகுதி. கழிவு அறை மற்றும் படுக்கை அறையும் இருக்கும் பகுதி.

13. வட-மேற்கில் விருந்தினர் அறை, கழிவு அறை மற்றும் படுக்கை அறையும் அமைக்க வேண்டும்.

~ ஆஸ்ட்ரோவேட் ஜோதிடர் மு. செந்தில் நாதன்

# பெண்களுக்கான மந்திரம்



பின்வரும் இந்த மந்திரத்தை எல்லோருமே கேட்டிருப்பார்கள். குறிப்பாக பெண்கள் எல்லோருக்கும் பரிச்சயமான மந்திரம் இது, ஆனால், இதில் உள்ள பயன் என்ன என்பது எத்தனை பேருக்குத் தெரியும்?

மந்திரத்தைப் பார்ப்போம்.

"சர்வ மங்கள மாங்கல்யே சிவே
சர்வார்த்த சாதகே
சரண்யே த்ரயம்பகே
தேவி நாராயணி நமேஸ்துதே"

மகிமைகள் பல கொண்ட இந்த மந்திரத்தினை பெண்கள் தினமும் சொல்ல வேண்டும். பூஜை வேளை என்றில்லாமல் எப்பொழுதும் எங்கும் மனதிலேயே சொல்லிக் கொள்ளலாம். செவ்வாய் கிழமையில் சொன்னால் செவ்வாய் தோஷம் விலகும். தினமும் செல்வதால் அஷ்ட லஷ்மிகளின் அனுக்ரகம் கிட்டும். குறிப்பாக செவ்வாய் அன்று துர்கை வழிபாட்டில் சொல்ல வேண்டிய மந்திரம் இது இதனை தொடர்ந்து சொல்வதால், குடும்பத்தில் அமைதி, வளம், நலம் போன்ற அனைத்து நல்லவையும் தானாக நடக்கும்.

~ ரா. பன்னீர்செல்வம்

# மந்திர மகிமை

சத்வித்யா நேயர்களே! நாம் இந்தப் பகுதியில் சௌந்தர்ய லஹரியில் அருளப்பட்ட ஸ்லோகங்கள் அனைத்தும் நம் வாழ்வை வளமாக்கும் மந்திரங்களாக பயன்படுத்திக் கொள்வது பற்றி பார்த்து வருகிறோம்.

அந்த வகையில் "இன்பம் பெருக" என்னும் தலைப்பில் அதிகமான செல்வம் பெற அருளும் மந்திரத்தைப்பற்றி பார்ப்போம்.

மந்திரம்

த்வயா ஹ்ருத்வா வாமம் வபு ரபரித்ருப்தேன மனஸா
சரீரார்த்தம் சம்போ ரபரமபி சங்கே ஹ்ருதமபூத்
யதேதத் த்வத்ரூபம் ஷகல மருணாபம் த்ரிநயனம்
குசாப்யா மாநம்ரம் குடில சசி சூடால மகுடம்.

இந்த மந்திரத்தின் பொருள் என்ன என்பது பற்றி சுருங்கப் பார்க்கின், பிறைசூடிய மகுடம், முக்கண், சிவந்த நிறம் என இறைவனின் அம்சம் அனைத்தையும் பெற்று அவரது இடப்பாகம் பெற்ற

உமையவளே. அவர் உடலில் பாதியைப் பெற்றும் திருப்தியடையாமல் முழுப்பாகமும் பெற்றுவிட்டாயோ என்று எண்ணத் தோன்றுகிறதே.

இந்த மந்திரத்தின் பொருளை ஆழ்ந்து நோக்குங்கால் பாதிபெற்றும் திருப்தியடையாமல் முழுவதையும் பெறுகின்ற ஆவல் நிறைந்துள்ளதைக் காணலாம்.



இது போலத்தான், ஒருவர் செல்வம் பெற விரும்பினால் அரைகுறையாக பாதி செல்வம் வேண்டாம், முழுமையான செல்வத்தை அருள்வாயாக, என்னும்படி பொருள் தரும் இந்த மந்திரத்தை பிரயோகம் செய்தால் போதும் என்ற அளவிற்கு அதிகமான செல்வத்தைப் பெற்று முழு திருப்தியோடு இன்பம் பெருகி வளமுடன் வாழ்வர்.

## மந்திரத்தைப் பிரயோகிக்கும் முறை

இந்த மந்திரத்திற்குரிய யந்திரத்தை தங்கத் தகட்டில் எழுதி, பூஜை செய்ய வேண்டும். தினமும் 1000 அல்லது 3000முறை 30 நாட்களோ அல்லது 45 நாட்களோ வடக்கு நோக்கி அமர்ந்து ஜபிக்க வேண்டும். செந்தாமரை இதழ்களால் லஷ்மி சஹஸ்ரநாம அர்ச்சனை செய்தால் நல்லது. பால்பாயசம், உளுந்துவடை, ஏலம், கிராம்பு, பச்சைக்கற்பூரம், குங்குமப்பூ ஆகியவை சேர்ந்த கர்ப்பூர வீடிகா என்னும் தாம்பூலமும் அன்னமும் நைவேத்யம் செய்தல் நலம்.

இவ்வாறு மந்திரப் பிரயோகம் செய்து பூஜிப்பதால் செல்வங்களை அதிக அளவில் பெற்று, கடன் தொல்லைகளிலிருந்து விடுபடலாம்.

~ ரா. பன்னீர்செல்வம்

Special Birthday Ritual Packages for You
Get 40% OFF
Call: 95660 00134

# வைகுண்ட ஏகாதசி

ஆலிலை மேல் பள்ளி கொண்ட பெருமாள், தம் நாபிக்கமலத்தில் (தொப்புளில்) இருந்து, பிரம்மதேவனைப் படைத்தார். அப்போது பிரமனுக்கு அகங்காரம் மேலிட்டது. அதேவேளையில் பகவானின் காதுகளில் இருந்து (பிரம்மதேவனின் காதுகளில்இருந்து என்றும் சொல்லப் படுவதுண்டு) இருஅசுரர்கள் வெளிப்பட்டு, அகம்பாவம் பிடித்த பிரம்மனைக்கொல்ல முயன்றார்கள். அவர்களைத் தடுத்த பகவான், "பிரம்மனைக் கொல்லாதீர்கள். வேண்டிய வரங்களைத் தருகின்றேன் உங்களுக்கு" என்றார். தெய்வமாக இருந்தாலும் கொஞ்சம் இரங்கி வந்தால்-இறங்கி வந்தால், அலட்சியம் செய்வது அசுரர்களின் சுபாவம் போலிருக்கிறது. அவர்கள், " நீ என்ன எங்களுக்கு வரம் தருவது? நாங்கள் தருகிறோம் வரம் உனக்கு" என்றார்கள். பகவான் சிரித்தார், "அப்படியானால் நீங்கள் இருவரும் என்னால் வதம் செய்யப்பட வேண்டும்" என்றார்.

திகைத்த அசுரர்கள், "பகவானே் தாங்கள் இவ்வாறு எங்களுக்குத் தண்டனை அளிக்கக்கூடாது. ஒருமாத காலம் நாங்கள் உங்களுடன் யுத்தம் செய்ய வேண்டும். அதன் பின் தங்கள் அருளால், நாங்கள் ஸித்தி அடைய வேண்டும்" என வேண்டினார்கள். அவர்கள் விருப்பப்படியே ஒருமாத காலம் போரிட்டு, அவர்களைக் கீழே வீழ்த்தினார் பகவான்.



பகவானின் கல்யாண குணங்களை உணர்ந்த அசுரர்கள், "பரம்பொருளே! தங்களின் பரமபதத்தில் நாங்கள் நித்தியவாசம் செய்ய வேண்டும்" என வேண்டினார்கள்.

மார்கழி மாதம் - வளர்பிறை ஏகாதசியன்று(பரம பதத்தின்)வடக்கு நுழைவாசலைத் திறந்த பகவான், அதன் வழியாக அசுரர்களைப் பரமபதத்தில் சேர்த்தார். அங்கே ஆதி சேஷன் மேல் இருக்கும் அனந்தனின் திவ்ய மங்கல வடிவங்கண்டு, பரம ஆனந்தம் அடைந்தார்கள் அசுரர்கள்.

கூடவே, "பரம்பொருளேபிரம்மா முதலான அனைவருக்கும் பகவானான தங்களை, அர்ச்சாவதார(விக்கிரக)மாகப் பிரதிஷ்டை செய்து, மார்கழிமாத வளர்பிறை ஏகாதசி அன்று, தாங்கள் எங்களுக்கு அருளிய அனுக்கிரகத்தை உற்சவமாகக் கடைபிடிக்க வேண்டும். அன்று(கோவிலில்)

வடக்கு நுழைவாசல் வழியாக வெளியே எழுந்தருளும் தங்களைத் தரிசிப்பவர்களும், தங்களுடன் வடக்கு நுழைவாசல் வழியே வெளி வருபவர்களும், அவர்கள் எவ்வளவு பெரும் பாவிகளாக இருந்தாலும், மோக்ஷம் அடைய வேண்டும். இதுவே எங்கள் பிரார்த்தனை" என வேண்டினார்கள்.

"அப்படியே ஆகும்" என்றார் பகவான்.

வைகுண்ட ஏகாதசியன்று வைகுண்ட வாசனைத் தரிசிப்பவர்கள் அனைவருக்கும் மோக்ஷம் கிடைக்கவேண்டும் - என நமக்காக அன்றே வேண்டியிருக்கிறார்கள் அசுரர்கள்.

பகவானும் அதற்கு ஒப்புதல் அளித்திருக்கிறார். ஆகையால் வைகுண்ட ஏகாதசியன்று பகவானைத்தரிசித்து, வளம்பெற வேண்டியது நமது பொறுப்பு.

~ சொல்லின் செல்வர் PN பரசுராமன்

# திருவாதிரை

## அல்லல் நீக்கிய ஆதிரையான்



தில்லையில் வாழ்ந்தவர், சில விநாடிகள் கூடச் சிவபெருமானை மறவாதவர், அம்பலக்கூத்தருக்குப் படைப்பதாகவே எண்ணி, அடியார்களுக்கு அன்னம் அளிப்பவர் - சேந்தனார். விறகு வெட்டி, அதை விற்று வரும் பணத்தில் அடியார்களுக்கு அன்னமிட்டு, அதன் பிறகே தானும் தன் குடும்பமும் உண்ணும் நெறி கொண்டவர். ஒருநாள்... பெரும் மழை பெய்ததன் காரணமாக தேவையான அளவு பணம் கிடைக்க வில்லை. ஏதோ கையில் கிடைத்த பணத்திற்கு ஏற்றாற்போல் மாவு வாங்கி, "இந்தாம்மா இதற்குத்தகுந்தாற்போல் களி செய்து வை!" என்று கூறி மனைவியிடம் கொடுத்தார். அன்று ஓர் அடியார் கூடக் கிடைக்க வில்லை. சேந்தனாரின் உள்ளம் அறிந்த சிவபெருமானே, ஒரு முதிய அடியார் வடிவில் வந்தார்.

வந்தவரை நமஸ்கரித்து வரவேற்று உபசாரங்கள்செய்த சேந்தனார், அவரை அமர வைத்துக் களி அமுதை இட்டார். அடியார் வடிவில் வந்த ஆடல்வல்லானோ, "ஆகா! ஆகா!" என்று மகிழ்ந்து உண்டு, மீதி இருந்ததையும் தன் ஆடையின் ஒரு பகுதியில் கட்டிக்கொண்டு அங்கிருந்து அகன்றார்.

அதே சமயம், தன் வழிபாட்டில் கூத்தப்பெருமானின் சிலம்பொலி கேட்டு மகிழ்வதை, நியதியாகவே கொண்ட சோழமன்னருக்கு, அன்று வழக்கப்படி கேட்கும் சிலம்பொலி

கேட்கவில்லை. மனம் வருந்தினார் மன்னர். அன்றிரவு மன்னர் உறங்குகையில் அவர் கனவில் காட்சியளித்த நடராஜப்பெருமான், “சேந்தன் தந்த களியமுதை உண்ணச் சென்றிருந்ததால், நீ நடத்திய பூஜைக்கு வரத் தாமதமாகி விட்டது” என்று கூறி மறைந்தார்.

கனவு கலைந்த மன்னர் வியப்புற்று, சேந்தனாரைக்காணும் ஆவலில் ஆடல் வல்லானின் ஆலயத்தை அடைந்தார். அங்கு கூடியிருந்த தீட்சதர்களும் அடியார்களும், “மன்னா! எப்படியென்று தெரியவில்லை. இங்கே பொன்னம்பலத்தில் எங்கு பார்த்தாலும் களியமுது சிதறிக் கிடக்கின்றது” என்று கூறினார்கள். மன்னர் தன் கனவைச்சொல்லி, “இது சேந்தனார் தந்த களி. தில்லையம்பலத்தார் நடத்திய திருவிளையாடல்” என்றார்.

ஆடல்வல்லானே தேடிப்போய் அமுது ஏற்றுக் கொண்ட சேந்தனாரின் பக்தி உணர்ந்து, அனைவரும் வியந்தார்கள், அவரைக்காண விரும்பினார்கள். அப்போது மார்கழித் திருவாதிரைத் திருவிழாவில் மழை பெய்ததன் காரணமாகத் தில்லையில், தேர் சேற்றிலழுந்தி ஓட இயலாமல் தடைப் பட்டு நின்றது.

அப்போது, “சேந்தனே! திருப்பல்லாண்டு பாடுக!” என அனைவரும் கேட்கும்படி, ஆகாயத்தில் இருந்து ஓர் அசரீரி கேட்டது. தேர் இழுக்கும் அடியார் குழுவில் நின்ற சேந்தனார், “மன்னுக தில்லை வளர்க நம் பக்தர்கள்” எனத் தொடங்கும் திருப்பல்லாண்டுபாடினார். வடம் பிடிக்காமலேயே தேர் ஓடி, நிலையில் நின்றது. கண்ட அரசரும் அடியார்களும் மெய் சிலிர்த்தார்கள்.

சேந்தனாரின் இந்த அருஞ்செயலை “திருக்களிற்றுப்படியார்” எனும் நூலில் உய்யவந்த தேவ நாயனார் அழகுபடப் பாடிப் போற்றியுள்ளார்.

அவிழ்ந்த துணியில் அவிழ்ந்த அவிழை
அவிழ்ந்த மனத்தால் அவிழ்க்க அவிழ்ந்த சடை
வேந்தனார்க்கு இன்னமுதாயிற்றே மெய்யன்பிற்
சேந்தனார் செய்த செயல்

இப்பாடலை ஒருமுறை வாய்விட்டுச் சொல்லிப் பாருங்கள்! இறைவன் பெருமை மட்டுமல்ல, இருந்தமிழின் அருமையும் தெரியும்.

~ சொல்லின் செல்வர் PN பரசுராமன்




KABA SURA KUDINEER
15 herbs effective against Viral infections, fever, cough and breathing difficulties
Call: 90030 77920

# எண் கணிதம்
# திருமணத்தில் எண்கணிதம்

எண் கணிதத்தின் அடிப்படைக் கூறுகள் மற்றும் பயன்பாடுகள், இவற்றின் பலன்கள் என பல விபரங்களை இது வரை பார்த்தோம்.

அதேபோல தொழில் துறைக்கும் தொழிலின் வளர்ச்சிக்கும் எப்படி பயன்படுத்த வேண்டும் என்பதையெல்லாம் இதுவரை பார்த்தோம்.



இந்தப் பகுதியில், திருமணத்தைப் பொறுத்தவரையில் வெற்றிகரமான வாழ்க்கை அமைய எண் கணிதத்தை எப்படி பயன்படுத்த வேண்டும்? என்னென்ன விஷயங்கள் பயன்படுத்த வேண்டும்? என்னென்ன விஷயங்கள் கவனிக்கப்பட வேண்டும் என்பதனை இப்போது பார்க்கலாம்.

திருமணம் என்றதும் ஜோதிட முறையைப் பயன்படுத்தி, ஆண், பெண் இருவரின் ஜாதகங்களை வைத்து 10பொருத்தம் பார்ப்பார்கள். அதில் அதிகபட்ச பொருத்தம் இருந்தால் திருமண ஏற்பாடுகளை செய்வது வழக்கம் இல்லையென்றால் பெயர்ப் பொருத்தம் பார்ப்பார்கள்.

அதன்பிறகு, பஞ்சாங்கத்தில் குறிக்கப்பட்டுள்ள முகூர்த்த நாட்களில் மணமக்களுக்குப் பொருத்தமான முகூர்த்த நாளை தேர்ந்தெடுத்து திருமணம் செய்ய முடிவெடுப்பார்கள்.

இவை ஒருபுறமிருக்க, எண்கணிதத்தில் ஆண், பெண் இருவருடைய பிறந்த எண், விதி எண் இவற்றை பிரதானமாக எடுத்துக்கொண்டு இருவருடைய எண்களும் ஒன்றுக்கொன்று ஈர்ப்பினை உடையதா? நட்பாய் உள்ளதா? என்பதை ஆராய்வார்கள் பிறவி எண்ணோ விதி எண்ணோ ஒன்றுக்கொன்று பொருந்திவரும் பட்சத்தில் அவர்களுக்கு திருமணம் செய்யலாம் என்று முடிவெடுப்பார்கள்.

ஆனால் இருவரின் மணவாழ்க்கை நீண்ட காலம் நிலைக்குமா? வளமோடு வாழ்வார்களா? அவர்களது இல்லறம் அறம் வளர்க்கும் இல்லறமா? சந்தான பராப்தி இருக்குமா? என்பன போன்ற வினாக்களுக்கு விடை சொல்வது, திருமண தேதி தான். ஆம் திருமணம் நடைபெறுகின்ற நாளின் கூட்டுத்எண் என்ன என்று பார்ப்பது தான் எண்கணிதத்தின் முக்கியமான அடிப்படை அம்சம் ஆகும்.

ஜாதகப்படி குறிக்கப்படுகின்ற முகூர்த்த நாளாக இருந்தாலும் கூட, கூட்டுத்தொகை சரியில்லாத நாளாக அமைந்தால் அந்த மணமக்களின் வாழ்க்கை பிரச்சினைக்குரியதாய் ஆகிவிடும், இதை பல்வேறு உதாரணங்களால் உறுதி படுத்தியுள்ளனர்.

அந்த வகையில் திருமண நாளின் கூட்டு எண் 2,4,7 ஆக இருந்தால் அவர்களின் வாழ்வில்




பிரச்சனைகள் நீடிக்கும், ஏதிர்பாராத சம்பவங்கள் நடக்கும் எனவும் 5,8 ஆக கூட்டு எண் இருக்குமானால் அவர்களது வாழ்வில் பிரிவு ஏற்படும் என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. பிரிவு என்றால் ஒருவரை விட்டு ஒருவர் பிரிவது மட்டுமல்ல இருவரில் ஒருவரின் உயிருக்கு கேடு விளைந்து பிரிவர் என்பது இங்கே கவனிக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

நாம் அன்றாடம் செய்தித்தாள்களில் காணுகின்ற, "விபத்தில் கணவன் கண் எதிரே மனைவி மரணம், குடும்பச்சண்டை, கணவன் தற்கொலை, குடும்பத்தகராறில் தீக்குளித்த மனைவி மரணம்" என இது போன்ற சம்பவங்களை ஆராய்ந்தால் அவர்களது திருமண தேதியின் கூட்டுத்தொகை 5,8 என்று முடிவதைக் காணலாம்.

அதே போல ஒரு குறிப்பிட்ட எண்ணில் பிறந்தவர்கள் தான் விவாகரத்து செய்வார்கள் என்னும் விதி, உலகம் முழுக்க ஒத்து வருகிறது அப்படி ஒரு மோசமான எண்ணில் பிறந்தவர்களைக் கூட, சேர்ந்தே வாழ வைக்கும் சூட்சுமம் எண் கணிதத்தில் உள்ளது.

எனவே, ஆயிரங்காலத்துப் பயிர் என்று போற்றப்படும் திருமண வாழ்க்கை நிலைத்து நிற்க, சிறந்து விளங்க நல்ல தொரு எண்கணித பண்டிதரை தொடர்புகொண்டு திருமணத்திற்கான தேதியை முடிவு செய்தல் நலம்.

எண் கணிதம் என்பது மற்ற வகையில் முழுமையாக நம்பாதவர்கள் கூட திருமண விஷயத்தில் எண்களின் சக்தியைப் புரிந்து கொண்டுள்ளனர். ஆகவே திருமணத்தேதியில் மட்டும் அவசரப்படாமல் பொறுமையாக சிந்தித்து எண் கணிதத்தின் துணையை நாடினால் அதிர்ஷ்டகரமான திருமண வாழ்க்கை அமையும் என்பது உறுதி.

~ ரா. பன்னீர்செல்வம்

# மேஷம்




- வாழ்க்கையில், சில ஏற்றத் தாழ்வுகள், சில முக்கிய மாற்றங்கள் போன்றவை ஏற்படும் வாய்ப்பு உள்ளது.
- கடந்த மாதம் மற்றும், நிகழும் மாதத்தில் சந்திரபகவான் இருக்கும் நிலை காரணமாக, பெரும் தாக்கம் ஏற்படக்கூடும்.
- குருபகவான் உரிய முறையில் வழி நடத்திச் செல்வார் என எதிர்பார்க்கலாம்.
- தகவல்தொடர்பு மூலமாகவும், உறவுகள் மேம்படுத்திக் கொள்ளமுடியும்.
- கவர்ச்சிகூடும், இதன் மூலம் ஆணாக இருந்தால் பெண்களையும், பெண்ணாக இருந்தால் ஆண்களையும் உங்களால் ஈர்க்க முடியும்.
- 5 ஆம்வீட்டின் அதிபதியான சூரியன், டிசம்பர்மத்தியிலிருந்து 9 ஆம்வீட்டில் சஞ்சாரம் செய்கிறார். இதன்காரணமாக, காதல் விவகாரங்களில் அதிக அதிர்ஷ்டத்தை எதிர்பார்க்கலாம்.
- குழந்தைகளுடன் உறவு மேம்படக்கூடும்.
- பெரியநோய், நொடிகள் எதுவும் இன்றி, உடல் நிலை நன்றாகவே காணப்படுகிறது.
- ராசிநாதனான செவ்வாய், மாதக்கடைசிவாரம் வரை, 12 ஆம்வீட்டில் இருக்கிறார். இதன் காரணமாக, தலைவலி, தலைக்குடைச்சல், மனஅழுத்தம், ஜுரம் போன்ற சில சாதாரணப்பிரச்சனைகளை எதிகொள்ளவேண்டியிருக்கலாம்.
- ஆரோக்கியத்தை நன்கு கவனித்துக் கொள்ளவும்.
- சோம்பேறித்தனம், ஆர்வமின்மை, சுணக்கம் போன்றவைகாரணமாக, சிலர், தங்கள் பாடங்களில் உரிய கவனம் செலுத்தாமல் போகலாம்.
- இதனால் கல்வி முயற்சிகள்பாதிக்கப்படலாம்.
- அதேநேரம், பல்கலைக் கழக மாணவர்களுக்கு, உயர் கல்விக்குரிய கிரகமான குருவின் வழிகாட்டுதல், மாதம் முழுவதும் கிடைக்கக்கூடும்.
- சூரியபகவானால் படிப்பு, வருங்கால வேலை குறித்த ஆசைகள் போன்றவை குறித்தும், சில பிரச்சனைகள் எழலாம்.

# ரிஷபம்




- காதல், வேலை, நிதி போன்றவற்றில், முன்னேற்றத்தை எதிர்பார்க்கலாம்.
    - டிசம்பர் மாத மத்தியில் சூரியன் அமைந்திருக்கும் நிலை, மீது ஆழ்ந்த தாக்கத்தை ஏற்படுத்தக் கூடும்.
    - எதையும் சரி செய்து விடலாம்' என்று கூட, சிலர் நினைக்கக் கூடும்!
    - பலம், திறமை போன்றவற்றை, பலரால் நன்கு உணர முடியும்.
- தீவிர உணர்வுகள், நடவடிக்கைகள், மனப்பான்மை இவற்றின் மூலம், உறவுகளையும் மேம்படுத்திக் கொள்ள முடியும்.
- துணை அல்லது துணைவரைக் கவருவதற்காக, சிலர், அதிக முயற்சிகளையும் மேற்கொள்ளக் கூடும்.
- வாழ்க்கைத் துணை அல்லது துணைவர் முக்கியத்துவம் பெறக்கூடும். அவருடன் உள்ள புரிந்துணர்வு வலுப்பெறக்கூடும்.
- செய்யும் வேலைக்காக, உயரதிகாரிகளிடமிருந்து அங்கீகாரம் கிடைக்கக்கூடும்.
- வேலை தொடர்பாக மேற்கொள்ளும் பயணங்களும், நல்ல பலன் தரக்கூடும்.
- வேலை, தொழில் போன்றவற்றைக் குறிக்கும் சனி பகவான், விதியைக் குறிக்கும் வீட்டில், வரங்கள் அருளும் குரு பகவானுடன் இணைந்து இருக்கிறார்.
- இது, வேலையில் பெரும் சிறப்புகளை அளிக்கக் கூடும்.
- எந்தக் காரணம் கொண்டும், அதிக மன அழுத்தத்துக்கு ஆளாக வேண்டாம்.
- உடலுக்கு ஏற்ற உணவுகள் உட்கொள்வதும், யோகா, உடற்பயிற்சி செய்வதும், சுறுசுறுப்பாக இருக்க உதவும்.
- மாதத்தின் முதல் வாரத்தில் சுக்கிரன் துலா ராசியில் இருப்பதனால், சிலருக்கு, இனப்பெருக்க அல்லது பிறப்பு உறுப்புகளில் சில பாதிப்புகள் ஏற்படக்கூடும்.
- உடல் இன்பம் குறித்த செயல்களில் அதிகம் ஈடுபடாமல் இருப்பது நல்லது.
- மாணவர்களுக்கு இது, சவாலான காலகட்டமாக இருக்கக்கூடும்.
- மாதத்தின் முதல் பாதியில், புதன், விருச்சிக ராசியில் சஞ்சரிப்பார்.
- இது, பள்ளி மாணவர்களுக்கு சாதகமாக அமையக்கூடும். மாதத்தின் பிற்பாதியில் புதன், தனுசு ராசியில் இருப்பது, அவர்களுக்கு ஓரளவு சவாலாக அமையக் கூடும்

# மிதுனம்




- வாழ்க்கையின் பல அம்சங்களிலும், குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை எதிர்பார்க்கலாம்.
- காதல் விவகாரங்களும், உறவுகளும் மிகுந்த சிறப்பு பெறும் எனலாம்.
- நண்பர்கள், அல்லது தொழில் கூட்டாளிகள், அல்லது தொடர்புவட்டத்தில் உள்ளவர்கள் போன்றவர்களுடன் சூடான விவாதங்களில் ஈடுபடாமல் இருப்பது அவசியம்.
- இவை சண்டைகளுக்கும், தவறான புரிந்துணர்வுகளுக்கும் வழி வகுத்து விடக்கூடும்.
- சிலருக்கு, சமுதாயவட்டத்தில், காதல் அரும்பும் வாய்ப்புள்ளது.
- காதல் தொடர்பாக முக்கிய முடிவுகளை எடுப்பதற்கு வேண்டிய தன்னம்பிக்கை தாராளமாக இருக்கக் கூடும்.
- சந்திரகிரகணத்தின் காரணமாக பணவிஷயத்தில் சில பாதிப்புகள் ஏற்படலாம்.
- சிலருக்கு, அவர்கள் வாழ்க்கைத் துணைவர் அல்லது அவரது பெற்றோர் மூலம், புதையல், அல்லது சில மறைமுக செல்வம் போன்றவை கிடைக்கவும் வாய்ப்புள்ளது.
- உணர்ச்சி வசப்படாமலும், பேராசைப் படாமலும், அமைதியாகவும், ஜாக்கிரதையாகவும் நடந்து கொள்வது
- புதிதாக எந்த வேலையையோ, திட்டத்தையோ ஏற்றுக் கொள்ளும் முன், நிலுவையில் உள்ள பணிகளை முடிப்பதில், கவனம் செலுத்துவீர்கள்.
- பேச்சுத்திறன், உயரதிகாரிகள் மற்றும் சக ஊழியர்கள் போன்றவர்களிடமிருந்து, அங்கீகாரம் பெற்றுத்தரக் கூடும். ஜாதகத்தில் வேலையைக் குறிக்கும் கிரகமான குரு, உத்யோகத்திற்கு அதிபதியான சனிகிரகத்துடன் இணைந்திருக்கிறார்.
- உடல்நிலையில் எந்தப் பெரிய அளவிலான பாதிப்பும் காணப்படவில்லை.
- மன அழுத்தம், மன வேதனை காரணமாக, சிலருக்கு ஆரோக்கியம் குறித்தகவலைகள் ஏற்படலாம்.
- செவ்வாய்கிரகம் மீனராசியில் இருப்பது, பணிக்கு உந்துசக்தியை அளிக்கும் என்றாலும், அது உடல்வலி, தலைவலி, பிற தொல்லைகள் போன்றவற்றையும் தரலாம்.
- மன உளைச்சலுக்கு ஆளாகாமல் இருக்க முயற்சி செய்யுங்கள்.
- அயல் நாட்டுக் கல்வி குறித்த திட்டங்கள் தாமதமாகலாம்.
- இதே வீட்டில் குருகிரகமும் இருப்பது,  கடுமையாக உழைக்கவும், எதிர்காலத்திற்கு திட்டமிடவும் வைக்கும்.

# கடகம்




- சாதகமான வளர்ச்சிப் பாதையில் பயணிக்கும் வாய்ப்பு உள்ளது.
- மூத்தவர்கள் அல்லது உயரதிகாரிகள் மற்றும் இளையவர்கள் அல்லது கீழ் பணிபுரிபவர்கள் ஆகியோரின் ஒத்துழைப்பும் கூட்டுறவும், நன்மை விளைவிக்கலாம்.
- இது போன்ற சுய புரிதலை நோக்கி, குரு மற்றும் சனி கிரகங்கள் வழிநடத்திச் செல்வார்கள் என்று நம்பலாம்.
- தெய்வீக ஆசியின் உதவியுடன் தான் செயல்கள் நடைபெறுகின்றன,
- நாம் செய்ய வேண்டியது எல்லாம், நம் கடமைகளை முறையாக நிறைவேற்றி விட்டு, செயல்கள் எவ்வாறு நடைபெறுகின்றன என்பதை கவனிப்பது மட்டும் தான், என்பதை கிரகங்கள் நமக்கு உணர்த்தக்கூடும்.
- சுய முன்னேற்றம் குறித்து சிலருக்கு ஆர்வம் அதிகரிக்கும்.
- விதியைக் குறிக்கும் குரு கிரகம், 7 ஆம் வீட்டில், சனி கிரகத்துடன் இணைந்து இருக்கிறார்.
- சேர்க்கை, உறவுகளை மேம்படுத்துவதற்காகக் கடுமையாக உழைக்கத் தூண்டும்.
- அதற்குத் தகுதியானவராக இருந்தால், இது நல்லதொரு தலைவிதியை ஏற்படுத்தித் தரக் கூடும்.
- நிதிநிலையில் சில பிரச்சனைகள் எழலாம். குடும்ப செலவுகளும், சில தேவையற்ற செலவுகளும், இதற்கு முக்கிய காரணமாக இருக்கக் கூடும்.
- இதன் மூலம், பொருளாதார நிலை படிப்படியாக மேம்படும். ஆனால் டிசம்பர் மாத மத்திய காலம் வரை, 2 ஆம் வீட்டின் அதிபதியான சூரியன், 6 ஆம் வீட்டில் சஞ்சரிப்பது குறித்து, கவனத்துடன் இருப்பது அவசியம்.
- பணி தொடர்பாக, சிலர், பல பயணங்களை மேற்கொள்ள வேண்டியிருக்கும். இவற்றால் எதிர்பார்க்கும் பலன் கிடைக்கவில்லை என்றால், வருத்தப்படக் கூடும்.
- தொடர்ந்து பயணங்கள் செல்வதனால், உடல் சோர்வும் ஏற்படலாம்.
- உயரதிகாரிகளைத் திருப்திப் படுத்துவதற்காகவே பயணம் செல்வதைத் தவிர்த்து விடுங்கள்.

# சிம்மம்




- தோற்றம், ஆளுமை போன்றவற்றில், இம் மாதம், பெரிய மாற்றங்கள் ஏற்படக்கூடும்.
- சிலர், சில நல்ல முதலீடுகள் குறித்து ஆழ்ந்து சிந்திக்கத் தொடங்கலாம்.
    - செல்வத்தை சாதாரணமாக எடுத்துக் கொள்ள முடியாது என்பதையும், அதை ஈட்டுவதற்கும், தக்க வைத்துக் கொள்வதற்கும், கடின முயற்சி செய்ய வேண்டும் என்பதையும், புரிந்து கொள்ளக்கூடும்.
- உடல் ரீதியான ஈர்ப்பைத் தவிர்த்து, சுயநலமற்ற, ஆன்மீக ரீதியான, தெய்வீகக் காதலை, நேரத்தில் எதிர்பார்ப்பீர்கள்.
- எதிர்காலத்தில், உங்களுக்கிடையே தவறான புரிதலை ஏற்படுத்தி விடலாம்.
- இது போன்ற பேச்சையோ, செயலையோ தவிர்ப்பது அவசியம்.
- சில குடும்பச் செலவுகள் அதிர்ச்சி அளிக்கக்கூடும்.
- குழந்தைகள், பெற்றோர், உடன்பிறந்தோர், மற்றும், குறிப்பாக துணைவருக்காக, விருப்பத்துடன் செலவு செய்வீர்கள்.
- இளைய சகோதர, சகோதரிகள் உங்களிடமிருந்து ஏதாவது நிதி உதவியை எதிர்பார்க்கக்கூடும்.
- அவர்களுக்குப் பணம் கடன் கொடுக்கத் தயாராக இருங்கள். அத்துடன் கூட, அவர்கள் நிதிநிலையை சீர்செய்யும் நோக்கில் அவர்களுக்கு சில அறிவுரைகளைக் கொடுப்பதும் நல்லது.
- வேலையில் உள்ளவர்களுக்கு, இம்மாதம், நம்பிக்கையூட்டும் ஒன்றாகக் காணப்படுகிறது.
- இது தன்னம்பிக்கையை மேம்படுத்தும். வேலை தொடர்பாக மேற்கொள்ளும் பயணங்களும், எதிர்பார்க்கும் பலன்களை அளிக்கக்கூடும்.
- அதிக அகம்பாவம், மற்றவர் மீது ஆதிக்கம் செலுத்துவது போன்றவை வேண்டாம்.
- வேலை தொடர்பாக பல விஷயங்கள் தெரிந்திருக்கலாம்.
- அடக்கமாகவும், எளிமையாகவும் இருப்பது அவசியம். நீண்டகால நன்மையைத் தரும்.
- இந்த காலகட்டத்தில், பெரிய ஆரோக்கியக் குறைபாடுகள் எதுவும் இன்றி, உடல்நிலை நன்றாகவே காணப்படுகிறது.
- செவ்வாய் கிரகம் மீன ராசியில் சஞ்சாரம் செய்வதனால், சிறு வலி, காயம், சிராய்ப்பு போன்றவை, சிலருக்கு ஏற்படலாம்.
- அபாயகரமான, முரட்டுத்தனமான நடவடிக்கைகள் எதிலும் ஈடுபடாமல், உடல்நிலையை கவனமாகப் பார்த்துக் கொள்வது நல்லது.

# கன்னி



- கவனம், குறிப்பாக, குடும்ப வாழ்க்கை, குடும்ப விஷயங்கள் இவற்றின்மீது இருக்கும் எனலாம்.
- நிதிநிலை, வேலை போன்றவற்றிலிருந்தும் கூட அவர்கள் கவனத்தைத் திருப்பி, குடும்பம் தொடர்பான விஷயங்களைச் சீர்செய்வதில் தீவிரமாக இருக்கக் கூடும்.
- பணத்தை இழந்தாலும் அதை மீண்டும் சம்பாதித்து விடலாம், ஆனால் அன்பு தொலைந்து போனால், அதை மீட்பது கடினம்' போன்றவற்றை உணரக்கூடும்.
- காதல் உணர்வுகள் ஆழமாக இருக்கக்கூடும்.
- ஒருவரது அன்பைப் பெறுவதற்கு, சுய நம்பிக்கை, துணிவு போன்றவை இன்றியமையாதவை என்றாலும், அளவிற்கு அதிகமான தன்னம்பிக்கை, அகம்பாவம் போன்றவை, உறவைக்கெடுத்து, தவறான புரிந்துணர்வுகள் எந்த உறவிலும் எழவாய்ப்புள்ளது.
- குடும்ப செலவுகள் குறித்து கடுமையானவாக்கு வாதம் எழவும் வாய்ப்புள்ளது.
- இவைப் பல பிரச்சனைகளை உருவாக்கலாம்.
- ஆரம்பத்தில் குழந்தைகள் சொற்களை ஏற்றுக் கொள்ளா விட்டாலும், இதே அறிவுரையை, அவர்களுக்கும் அளிப்பீர்கள்.
- மூத்தவர்கள் மீது மரியாதை காட்டுமாறு குழந்தைகளைப் பழக்குங்கள்.
- தொழில் ஒப்பந்தங்கள் லாபகரமாக இல்லாமல்போகலாம்,
- சில ஒப்பந்தங்கள் பாதகமாகவும் கூட இருக்கலாம்.
- இளைய உடன்பிறப்புகள், அல்லது குடும்பத்தினர், அல்லது உறவினர் உதவியால், சிலருடைய தொழில், அதிர்ஷ்டகரமாக அமையக்கூடும்
- குழந்தைகளின் எதிர்காலம் பற்றிய கவலையும், உடல் நிலையை பாதிக்கலாம். வாழ்க்கைத் துணைவரின் குடும்பத்தினரும், மன அழுத்தம் தரலாம்.
- அவர்களும் சில நோய்களால் பாதிக்கப்பட்டிருக்கலாம்,
- உடல் மற்றும் உணர்வுரீதியான ஆதரவை எதிர்பார்க்கலாம்.
- இவை அனைத்தும் சோர்வடையச் செய்யக்கூடும்.
- மாணவர்களுக்கு இது சாதகமானகாலமாக இருக்கக்கூடும்.
- ஒரு ஒளி மயமான எதிர்காலம் காத்திருப்பதாகவும், அவர்கள் நினைக்கக்கூடும்.
- அவர்கள் காட்டும் ஆர்வம், அவர்களது கல்விக் குறிக்கோள்களை அடையச்செய்யும்.
- போட்டித் தேர்வுகளில் பங்கெடுத்துக் கொள்பவர்களும், ஓரளவு எளிதாக தேர்ச்சி பெறும் வாய்ப்புள்ளது.

# துலாம்



• கல்வி, சமுதாய உறவுகள் போன்றவற்றில் சில மாற்றங்கள் நிகழ்வதை காணலாம்.

• பெரும் தாக்கத்தையும் ஏற்படுத்தக் கூடும், குறிப்பாக இது, பிறருடன் எப்படிப் பழகுவது, நடந்து கொள்வது என்பது தொடர்பாக இருக்கக் கூடும்.


- வாழ்க்கையில், உகந்தவர்களையும், ஏற்றவர்களையும் கண்டறிய, குரு பகவான் துணைபுரிவார் என எதிர்பார்க்கலாம்.
- அறிமுகமே இல்லாத புதியவர்களுடன் கூட தொடர்பு கொண்டு, அவர்களையும் நண்பர்களாக்கிக் கொள்ள சுக்கிர பகவான் துணை புரியக்கூடும்.
- ஆன்மீக மற்றும் பொருளாதார நோக்கங்களுக்கு இடையே ஏற்படும் பொருத்தமின்மை எனலாம்.
- செவ்வாய், குழந்தைகள் மீது கவனத்தைத் திருப்பக்கூடும்.
- சிலரால், வாழ்க்கைத் துணைவருக்காக உரிய நேரம் ஒதுக்க முடியாமல் போகலாம்.
- நன்மதிப்பை உயர்த்துவதற்கு, விலையுயர்ந்த பரிசுகள் போன்றவை எல்லாம் அளிக்கத் தேவையில்லை.
- பணவரவு நன்றாக இருக்கக்கூடும்.
- வேலையில், விற்பனை, தொலைத் தொடர்பு அம்சங்கள் மூலம் வருமானம் வரக்கூடும்.
- கூட்டு வியாபாரம் தொல்லை தரலாம்.
- தொழில் ஒப்பந்தங்களும் வெற்றியளிக்காமல் போகலாம்.
- பயணங்களால் தேவையற்ற செலவுகள் ஏற்படலாம்.
- பயணங்களால் பண விரயங்களும், ஆரோக்கியக் குறைபாடுகளும் ஏற்படக்கூடும் என்பதால், தேவை ஏற்படும் பொழுது மட்டும் பயணம் செய்யுங்கள்.
- நலம் விரும்பிகள், உயரதிகாரிகள் போன்றவர்களின் அறிவுரையை ஏற்று, அதிகப் பயணங்கள் மேற்கொள்ள விரும்ப மாட்டீர்கள்.
- விரிவான மருத்துவப் பரிசோதனை செய்து கொள்வது நலம் தரும்.
- கணவர் அல்லது மனைவியின் ஆரோக்கியமும் சிறப்பாக அமையாமல் போகலாம்.
- இருவரும் இணைந்து சத்தான உணவு சமைக்கலாம்.. இது , உணர்வு பூர்வமாக நெருக்கத்தில் கொண்டு வரக்கூடும்.
- ஆசைகளுக்கும், கனவுகளுக்கும் தடைகளாக இருக்கும் சவால்கள் அனைத்தும் விலகிப் போவதை, அவர்களால் உணர முடியும்.
- செவ்வாய் கிரகம் அமைந்திருக்கும் நிலை காரணமாக, பள்ளி, கல்லூரி மாணவர்கள் என்ற இரு சாராரும், நன்றாகக் கல்வி கற்க இயலும் எனலாம்.

# விருச்சிகம்



- இது குறிப்பாக, வேலை மற்றும் உறவுகள் தொடர்பாக, துடிப்பான மற்றும் சாதகமான மாதமாக அமையக்கூடும்.
- மற்றவர்களிடம் எப்படி நடந்து கொள்வது, பழகுவது என்பன போன்றவற்றையும், செவ்வாய் போதிக்கக்கூடும்.
- புதன் மற்றும் குரு கிரகங்கள், தொழில் தொடர்புகளை விரிவுபடுத்தி, லாபம் ஈட்ட உதவக்கூடும்.
- காதல் என்பது, கவனத்தைக் கவரும் முக்கிய விஷயங்களில் ஒன்றாக இருக்கக்கூடும்.
- இன்பம் தரும் நடவடிக்கைகளில் அளவுக்கு அதிகமாக ஈடுபட வேண்டாம் அவை வாழ்க்கையின் மற்ற முக்கிய விஷயங்களிலிருந்து திசை திருப்பி விடலாம்.
- நேரத்தில் வாழ்க்கைத் துணைவர் மீது உரிய கவனம் செலுத்துவது அவசியம்.
- குடும்பத்தில் அன்பும், சந்தோஷமும் நன்கு அதிகரிக்கும் வாய்ப்புள்ளது.
- பணவரவு தாராளமாக இருக்கக்கூடும்.
- கல்விக்காகவும், பொழுது போக்குக்காகவும், உங்களிடம் பணம் கேட்கும் வாய்ப்புள்ளது.
- இந்த விஷயத்தில் குழந்தைகளுக்கு ஏமாற்றம் தராமல் இருக்க வேண்டும் என்றால், வரவு செலவுகளை, சரியாக திட்டமிட வேண்டியது அவசியம்.
- எதிர்காலத்திற்காக பணத்தை சேமிப்பதும் அவசியம்.
- பணி, உயரதிகாரிகள் மனதைக் கவர்வதாக இருக்கக்கூடும், அதே நேரம், கீழ் பணிபுரிவர்களும், ஆலோசனை கேட்கலாம்.
- பணியில் சிலர் ஆக்ரோஷமாக நடந்து கொள்ளும் வாய்ப்புள்ளது.
- பிறர் மீது கோபப்படவோ அல்லது சில நடவடிக்கைகள் காரணமாக, மற்றவர்கள் மீது மனவருத்தம் கொள்ளவோ வாய்ப்புள்ளது.
- திறன் மீது நம்பிக்கை கொண்டவர்களுடன் நெருக்கமாக இருப்பது நன்மை தரும்.
- உடல்நிலையில் சிறிய பின்னடைவு ஏற்படலாம். சிலருக்கு சளி, ஜுரம் போன்ற தொந்தரவுகள் ஏற்படும் வாய்ப்புள்ளது.
- பெற்றோர், உடன்பிறந்தவர்கள் போன்றவர்களின் ஆரோக்கியமும் மிகவும் நன்றாக இருக்கும் என்று சொல்ல முடியாது.
- துணைவர் நன்றாக கவனித்துக் கொள்ளக் கூடும்.
- மாணவர்களுக்கு சாதகமான ஒன்றாக இல்லாமல் போகலாம்.


# தனுசு



- ஒரு நல்லமாதமாக இருக்கக்கூடும்.

- கிரக அமைப்புக்கள் சாதகமாகத் தென்படுவதால், கல்வி, குடும்பம், காதல் வாழ்க்கை, பண விஷயங்கள் போன்றவை அதிர்ஷ்டகரமாக அமையக்கூடும்.
- மனம் தெளிவுடனும், ஊக்கத்துடனும் இருக்கக்கூடும்.
- முக்கியகிரகங்கள், குடும்பத்தில் மூத்தவர்களின் அறிவுரை குறித்தும், மகான்கள், முனிவர்களின் போதனைகள் குறித்தும் ஆழ்ந்து சிந்திக்கவைக்கும் எனலாம்.
- பணியிடம் அல்லது நண்பர்கள் வட்டம் மூலம், வாழ்க்கையில் காதல் மலரக்கூடும்.
- சுக்கிரகிரகம், பிறரைக் கவரும் வகையில், அழகாக தோற்ற மளிக்கச் செய்யலாம்.
- முதிர்ச்சியற்ற முறையில் நடந்து கொள்வது, உறவுகளில் பெரிய பாதிப்பை ஏற்படுத்தி விடலாம் என்பதை உணரக்கூடும்.
- பணவரவு தாராளமாக இருக்கும் எனலாம்.
- பழையவாகனங்கள், வீடு, மனை போன்ற சொத்துக்கள் போன்றவற்றை விற்பதன் மூலமும் வருமானம் ஈட்டக்கூடும்.
- இருவருக்கும் இடையே, கருத்து வேறுபாடுகள் ஏற்படலாம். துணைவரிடம் வெளிப்படையாக இருப்பது நல்லது.
- இதன் மூலம், பின்னர் பிரச்சனைகள் ஏற்படுவதைத் தவிர்க்கலாம்.
- பணியில் உள்ளவர்கள் கடுமையாக உழைக்கக்கூடும்.
- சம்பள உயர்வு அல்லது பதவி உயர்வு போன்ற வற்றுக்காக, சிறிது காலம் காத்திருக்க வேண்டும் என்று உயரதிகாரிகள் உங்களிடம் தெரிவிக்கக்கூடும்.
- பொறுமை இழக்கவும் வாய்ப்புள்ளது. இது பேச்சிலும், செயலிலும் வெளிப்பட்டு, வேலையில் சில பிரச்சனைகளை உருவாக்கக் கூடும்.
- அதிகக் கொழுப்புசத்து, ரத்த அழுத்தம் போன்றவற்றாலும் சிலர் பாதிக்கப்படலாம்.
- மருந்து, மாத்திரைகளை விட, ஆன்மீக ரீதியிலான பரிகாரங்கள் நீடித்த பலன்தரும் என்பதை, உணரக்கூடும்.

# மகரம்




- பல நன்மைகளைத் தரும் மாதமாக அமையக் கூடும்.
- எல்லாம் வல்ல இறைவன் மீது  கொண்டுள்ள நம்பிக்கையின் பயனாக, சவால்களை எல்லாம் சமாளித்து  வெற்றியடையக்கூடும்.
- என்ன சாதிக்க விரும்புகிறீர்கள் என்பது குறித்து தெளிவாக இருங்கள், அந்த இலக்குகளை அடைய, முனைப்புடன் செயலாற்றுங்கள்.
- வாழ்க்கையின்  முன்னேற்றத்திற்கு, கிரகங்கள் கண்டிப்பாகத் துணைபுரியும் என எதிர்பார்க்கலாம்.
- காதல் உறவுகள் நன்றாக அமையக்கூடும்.
- துணைவர் மீது,  ஆதிக்கம் செலுத்த முயலக்கூடும்.
- சுக்கிர கிரகம்  அமைதியாக பேச வைக்கக்கூடும், அதே நேரம், செவ்வாய்  பேச்சை சற்றே கடுமையாக்கக் கூடும். எனவே, கவனமாக இருக்கவும்.
- கோபம் உறவுகளைக் கடுமையாக பாதித்து விடலாம் என்பதை   உணரக்கூடும்.
- பணவரவு மிகச் சிறப்பாக இருக்கக்கூடும். ஆனால் அது சீராக இல்லாமல் இருக்கக்கூடும் என்பதால்,  சில நேரங்களில் மன அழுத்தம் ஏற்படலாம்.
- நிச்சயமில்லாத, பாதுகாப்பற்ற முதலீடுகளில் இறங்க வேண்டாம்.
- ஒரு சூதாட்டத்திற்கு ஒப்பானது என்பதை நினைவில் கொள்ளுங்கள்.
- எங்கு முதலீடு செய்யலாம் என்பது குறித்து அறிந்து கொள்ளலாம். இதனால், அதிக லாபம் கிடைக்காவிட்டாலும்,  பண நஷ்டம் அடையாமல் இருக்கலாம்.
- பணியில் முன்னேற்றம் தரும் காலமாக இது அமையக்கூடும். இருப்பினும்,  வளர்ச்சி, சிலருக்குப் போதுமானதாகவும், எதிர்பார்ப்புக்கு ஏற்றதாகவும் இல்லாமல் போகலாம்.
- மருத்துவ உதவி எதுவும் தேவையின்றி,   உடல்நிலை சாதாரணமாகவே இருக்கும் எனலாம்.
- ஆரோக்கியமான உணவை உட்கொள்ளவும்
- உடற்பயிற்சி, தியானம் போன்றவற்றைத் தவறாமல் செய்யவும்.
- சிலர், அவர்கள் விரும்பிய கல்லூரியிலோ, கல்வி நிறுவனத்திலோ சேர இயலாமல் போகலாம்.
- இது மனவுறுதியைக் குறைத்துவிடலாம்.
- கடன் பெற்றிருக்கும் மாணவர்கள் சிலர், அதைத் திருப்பிச் செலுத்துவது குறித்து, மன அழுத்தத்துக்கு ஆளாகலாம்.

# கும்பம்



- சமுதாயத் தொடர்புகள், நட்புறவு போன்றவை மூலம் நன்மைகள் ஏற்படக்கூடும்.
- நண்பர்களிடமிருந்தும், நலம் விரும்பிகளிடமிருந்தும் ஆதரவை எதிர்பார்க்கலாம்.
- நம்பிக்கை காரணமாக, எந்த மாற்றம் நிகழ்ந்தாலும், அதிலிருந்து பொதுவாக பயனடையக்கூடும்.
- வாழ்க்கையில் நிலையானது மாற்றம் ஒன்றுதான் என்பதை உணர்ந்து, அந்த மாற்றங்களுக்கு ஏற்றவகையில், தனிப்பட்ட முறையிலும், உத்யோகம் தொடர்பாகவும், மாற்றிக் கொள்ளக்கூடும்.
- இது துணைவருக்குப் பிடிக்காமல் போகலாம்.
- பிறருக்கு, குறிப்பாக துணைவருக்கு, அதிகாரம் செலுத்து பவராகக் காட்சியளிக்கலாம்.
- தன்னம்பிக்கையை வெளிப்படுத்துகிறீர்கள் என்பதுதான் உண்மையாக இருக்கும்.
- சுக்கிரன் மென்மையாகப் பேசுமாறு செய்யக் கூடும்.
- காதல் விவகாரங்களில் முன்னேற்றம், அவை தொடர்பாக பொறுப்புடன் நடந்து கொள்வது போன்றவை முக்கியத்துவம் பெறக்கூடும்.
- பணவரவு நன்றாக இருக்கும். முன்பு ஏதாவது முறைகேடுகள் நிகழ்ந்திருந்தாலும், நிதிதொடர்பான மனஅழுத்தம் ஏற்பட்டிருந்தாலும், அவை எல்லம் தீர்ந்து விடும் வாய்ப்பு உள்ளது.
- பணித்திறன் சிறந்து விளங்கக்கூடும்.
- வேலையில் குறிப்படத் தக்க முன்னேற்றமும் ஏற்படக்கூடும்.
- வெற்றிக்கான பாதையில் தடங்கல்கள் ஏற்படக்கூடும்.
- மருத்துவ உதவிக்கான தேவை எதுவும் இன்றி, ஆரோக்கியமாகவே இருப்பீர்கள் எனலாம்.
- தலைவலி, வேலையின் காரணமாக மனஅழுத்தம் போன்ற சிறு தொந்தரவுகள் இருந்தாலும், அவைகூட குணமாகிவிடக்கூடும்.
- மாணவர்களுக்கும், இது ஒரு நல்ல மாதமாக அமையக்கூடும்.
- அயல்நாடுகள் செல்ல விரும்புவோருக்கு, முயற்சியில் வெற்றி கிடைக்கக்கூடும்.
- விரும்பியது கிடைக்கும் என எதிர்பார்க்கலாம்.
- படிப்பில் தீவிர கவனம் செலுத்தி, அதில் சிறந்து விளங்கக்கூடும்.

# மீனம்



- கல்வி, குடும்பம், காதல் வாழ்க்கை, அல்லது பணவிஷயங்கள் போன்ற எதுவாக இருந்தாலும், நண்பர்கள் மற்றும் நலம் விரும்பிகளின் ஆதரவு தேவை என்பதை உணரக்கூடும்.
- எற்ற நபர்கள், சரியான சூழ்நிலை போன்றவற்றின் ஆதரவு இருக்குமானால், பலவற்றையும் சாதிக்கலாம். விருப்பங்களையும் நிறைவேற்றிக் கொள்ளலாம். பிறரை நம்புவது என்பதன் பொருள், பல வீனமானவர் என்பதோ அல்லது பிறரைச் சார்ந்திருப்பவர் என்பதோ அல்ல.
- துணைவர் மீது நம்பிக்கை கொள்ள விரும்பினாலும், குழப்பம், அகம்பாவம் போன்றவை காரணமாக, இவ்வாறு செய்ய உங்களால் இயலாமல் போகலாம்.
- சுக்கிர கிரகம் மென்மையாகப் பேசச் செய்தாலும், செவ்வாய் ஒரு ஒற்றனாகக் கூடமாற்றிவிடக் கூடும்.
- எந்த உறவும் வலிமையாக இருக்க வேண்டு மென்றால், அதில் நம்பிக்கை என்பது மிகவும் அவசியம். பணவரவில் ஏற்றத்தாழ்வுகள் இருக்கக்கூடும்.
- பண விஷயங்கள் குறித்து முடிவெடுப்பதற்கு முன்னர், பெற்றோர்கள், நண்பர்கள் அறிவுரையக் கேட்பது நல்லது.
- யாருக்கெல்லாம் பணம் கடன் கொடுக்கலாம், யாருக்குக் கொடுக்கக் கூடாது போன்றவை குறித்து தெரிந்து கொள்க.
- மன அழுத்தமும் ஏற்படக்கூடும்.
- உயரதிகாரியும் ஆதரவாக இல்லாமல் போகலாம்.
- கடினமாக உழைக்கும் அளவுக்கு உழைக்காத சில சகஊழியர்கள் வெற்றி பெறக்கூடும்,
- உடற்பயிற்சி, தியானம் செய்யுங்கள், சத்தான உணவு உட்கொள்ளுங்கள்.நீண்டகாலப் பயனளிக்கும்.
- மாணவர்களுக்கு, ஓரளவு சாதகமான மாதம் எனலாம்.
- பெற்றோர்களின் எதிர்பார்ப்புகள் அல்லது சகமாணவர்களின் அழுத்தம் காரணமாக, மாணவர்களுக்கு மன உளைச்சல் ஏற்படலாம்.

~ ஆஸ்ட்ரோவேட் ஜோதிடர் ஜெயம் ஜனார்தனன்

அனைத்து ஜோதிட, புரோஹித மற்றும் ஆன்மிக சேவைகளுக்கு
தொடர்புகொள்ள: **95660 00134**